ஓம்
திருமுருகன் துணை

துவிபா ஒருபது

(உரையுடன்)

✠

நூலாசிரியர்:

வண்ணச்சரபம்
தவத்திரு தண்டபாணி சுவாமிகள்
திருவாமாத்தூர்.

உரையாசிரியர் :

தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

வெளியீடு :

செம்மங்குடி மேல்நிலைப் பள்ளி
நிறுவுநர் அமரர் எஸ். எஸ். நடேசய்யர் அவர்கள்
நினைவு மலர்.

27—1—1989

செம்மங்குடி மேல்நிலைப் பள்ளி

செம்பங்குடி.

பள்ளி நிறுவுனர்

அமரர் **எஸ். எஸ். நடேசய்யர்** அவர்களின்

(தோற்றம் : 14—1—1891 மறைவு : 20—12—1969)

நினைவு மலர் - எண் 10

குவிபா ஒருபது

(உரையுடன்)

வெளியிடுவோர் :

எஸ். எஸ். நடேசய்யர் அறக்கட்டளை,

செம்பங்குடி - 612 603.

1989

ஓம்

குமரா சரணம்.

பதிப்புரை.

இப்பள்ளியின் நிறுவுநர் அமரர் எஸ். எஸ். நடேசய்யர் அவர்தம் நினைவாக ஆண்டுதோறும் மலரும் வரிசையில் இப்பா மலரும் ஒன்று, அகன்ற படிப்பறிவுடன் இறை உணர்வும் பெற்று மாணவர் உயர்வது, பூத்த மலர் நறுமணமும் பெற்றுச் சிறப்புறுவதற்குச் சமமாகும். இந்நெறியில் மாணவர் உலகை அழைத்துச் சென்று செம்மைப் படுத்துவதே இன்றைய நிலையில் இன்றியமையாத பணியாகவும், தொண்டாகவும் கருதப்படுகிறது. எஸ்.எஸ்.என். அறக்கட்டளை அத்தகைய கடமையை மேற்கொண்டு உலகு சிறக்கப் பல பணிகளைப் பொறுப்பேற்று உதவி வருகின்றது.

இவ்வறக் கட்டளையின் புரவலர் திரு என். விச்வநாதன் எம். ஏ., பி. எட்., அவர்கள் தாம் இப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தே மேற்கொண்ட தோத்திர நூல் வெளியிடும் பணி, அன்னார் இப்பள்ளியின் தாளாளராகப் பணியேற்ற பின்னும் தொடர்ந்து செயல் படுவதுடன் இன்று ஓர் புத்துருவையும் பெற்று விளங்குகிறது. மக்கள்

நாவிலும் மனத்திலும் பயின்று முன்னமேயே அச்சேறிய நூல்களின் பகுதிகளே இந்நிறுவன வெளியீடாக இந்நாள் வரை வெளிவந்தன ஆனால் ஓலைகளில் இதுகாறும் புதைந்திருந்த "குவிபா ஒருபது" எனும் இந் நூல், தமிழுக்கும் அதன் வழி சமய வளர்ச்சிக்கும் இயன்றதைச் செய்ய வேண்டும் என்னும் பேரவாவின் காரணமாக இவ்வறக் கட்டளையின் புரவலர்தம் தூய எண்ணத்தின் வடிவாகி அச்சு வடிவு பெற்றுப் பெருமை கொண்ட சிறு மலராக உங்கள் கையில் மணக்கிறது.

தமிழுலகால் பாராட்டப்படும் இவ்வரிய பணிக்காக இவ்வறக் கட்டளையின் புரவலரைப் பாராட்டி இதுபோலும் பல் பணியாற்றி அன்னார் சிறந்து வாழ இறையருளை இறைஞ்சுகின்றோம்.

இந்த நூலை ஏட்டிலிருந்து பிரதி எடுத்து நல்கும் பொறுப்பை ஏற்று அவ்வாறே உதவிய வலையப்பேட்டை திரு ரா. கிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி கூறி அவர் நீண்ட ஆயுளும் வளமும் பெறத் திருமுருகன் திருவருளைச் சிந்திப்போமாக.

செம்மங்குடி மேல்நிலைப் பள்ளி,
செம்பங்குடி,
14-1-89.

இங்ஙனம்,
ஆசிரியர்கள்.

ஓம்

அறிமுகம்.

தமிழ் எழுத்துகள் 247-ல், இதழ் (உதடு) குவிதல் ஒட்டுதல் ஆகிய முயற்சிகளால் உண்டாகின்ற 119 எழுத்துகளைமட்டும் கொண்டு பத்துப் பாடல்களாக அமைந்தது 'குவிபா ஒருபது' எனும் இந் நூலாகும். இந்நூலில் முருகன் தன் அடியாரைக் காத்தருளும் சிறப் பையும் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் அவன்தன் நல்லருள் வெளிப்பாட்டையும் கொண்டு பாராயணம் செய்வோர் உள்ளப் பாரத்தைப் போக்கும் வகையிலும் அமைந்துள்ளது திருமுருகனைப் பற்றிய இந்நூலின் ஆசிரியர் வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் ஆவார். திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என்றெல்லாம் சமய உலகால் போற்றப்படும் இம் மகான் 1839-ல் திருநெல்வேலியில் அவதரித்தார். அறுசமய வளர்ச்சிக்காகவும் பல் நூல்களை அருளிய நம் சுவாமிகள் பாடிய பாடல்களில் 49722 தற்போது கிடைத்துள்ளன, நாயன்மார்களின் வரிசையில் போற்றத் தகும் தெய்வத் தமிழ்க் களஞ்சியமாகத் திகழ்ந்த நம் சுவாமிகள் விழுப்புரத்தை அடுத்த திருவாமாத்தூரில் கௌமார மடத்தை நிறுவி 1898 திருவருளில் கலந்தார். சுவாமிகளின் தெய்வப் படைப்பு

களைப் பாதுகாத்துப் பதித்திடும் பணியில் சுவாமிகளின் பெயரர் தவத்திரு முருகதாச சுவாமிகள் அவர்கள் அயராது உழைத்து வருவது போற்றற்குரியது.

வண்ணச்சரபம் அருளிய. இதுவரை அச்சில் வராத இந்தக் 'குவிபா ஒருபது', உரையுடன் இப்போது அச்சில் வருகிறது.

எஸ். எஸ். என். அறநிறுவனத்தினர்.



எஸ். எஸ். என். அறக்கட்டளையின் வெளியீடுகள்.

1.	தோத்திரப் பாடல்கள் :	30—12—1977
2.	பாம்பன் சுவாமிகள் பகை கடிதல் குமாரஸ்தவம் சண்முக கவசம்	9—1—1979
3.	சிவபுராணம் கோளறு பதிகம்	28—1—1980
4.	ஸ்ரீ கந்த ஷஷ்டி கவசம்	3—12—1980
5.	நலம் மலி நாரணன் பாமாலை	6—1—1982
6.	திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்	31—12—1983
7.	குமரகுருபரர் அருளிய சகல கலாவல்லிமாலை வியாசர் - நவக்கிரஹத் தோத்திரம் வான்மீகி - ஆதித்ய ஹிருதயம்	9—1—1984
8.	ஸ்ரீ காசியபரின் கணபதி நவரத்தின கவசம் முருகன் பாமாலைகள்	30—12—1984
9.	ஆழ்வார்களின் அனுபவம்	23—12—1985

உ

குருவே துணை.

குவிபா ஒருபது.

காப்பு.

ஒருபது குவிபா ஓதுவ கோடு
மருவுபேர் உவாவும் மாவடும் வேலுமே.

பொருள்.

ஒருபது - பத்து என்னும் தொகையுடையதாய்
குவி - இதழ் குவியப் பாடுகின்ற
பா - பாடலையுடைய இந்நூல்
ஓதுவ - குற்றமறப் பாடுவிக்கும் தெய்வம்
கோடு - ஒற்றைக் கொம்பை
மருவு - பொருந்தியுள்ள
பேர் - பெரியதான
உவாவும்-விநாயகரான யானையும்
மா - கயமுகாசுரனை
அடும் - கொன்றருளிய
வேலும் - அம்மூர்த்தியின் கொம்பு என்ற ஆயுதமும் ஆம்
ஏ-று-ஏ-அசை

கருத்து.

விநாயகரான யானையும், கயமுகனைக்கொன்ற அவரது கொம்பாகிய

ஆயுதமும் ஆகிய தெய்வங்கள் இந்நூலைக் குற்றமறப் பாடுவிக்கும் என்பதாம். அன்றியும் கோடு மருவு - மலைகளில் வசிக்கும் விருப்பினராய் இளையரான முருகக் கடவுளும், மாஅடும்வேலும் - மாமரமாகிய சூரனைக் கொன்ற வேலாகிய தெய்வமும் என, கணபதிக்கும் முருகப் பெருமானுக்கும் உரிய முறையில் காப்பு அமைந்துள்ளது.

உவா - யானை. உவா என்ற சொல் யானையாகிய கணபதிக்கும், இளையவரான முருகப் பெருமானுக்கும் அமைந்திருப்பது நயமாகும். 'கடதடகும்பக் களிற்றுக் கிளைய களிற்றினை'' என்ற அருணகிரிநாதரின் 'வாக்கு நினைவு கூறத்தக்கது.

ஓதும் - என்பது பிறவினைப் பொருளில் வந்தது. ஓதுதற்குத் துணையாயிருந்து உதவும் என்பதாம். அசுரனை கயமுகனைக் கொன்று வெற்றி பெற்றது கொம்பு. அதுபோல சூரனை மாமரத்தைப் பிளந்து வெற்றி பெற்றது வேலாயுதம். எனவே கடினமான முறையில் அமைந்த இக்கவிகளைப் பாடி வெற்றி பெறுவதற்கு அவற்றைத் துணை நாடினர் ஆசிரியர். (இதன் இலக்கணத்துக்குச் சந்தி பிரிக்காமலிருக்கவேண்டும். சில இடங்களில் கால நிலைமைக்குச் சந்தி பிரிக்க நேர்ந்தது குறிப்பிடத் தக்கது)

நூல்

முருகோ விபவா மூவா மேலோர்
உருவா வருவாய் ஓதோ(து) ஓமூ(டு)
ஒருவா துறும்ஆ வூமா வேமா
குருகோ லும்அவை கொளுமால் உகுமே. 1

பொருள்

முருகோ - முருகப் பெருமானே!
விபவா - பெருமையுடையவரே!
மூவா - கெடாத
மேலோர் - பெரியோர்களது
உருவா - வடிவங்களைக்கொண்டு
வருவாய்-அன்பர் முன் வருபவரே
ஓம்ஊடு - பிரணவ எழுத்தின்கண்
ஒருவாது - நீங்காமல்
உறும் - பொருந்தியுள்ள
ஆ. ஊ. மா. வே - அகார, உகார மகாரங்களின் பொருளையே
ஓதுஓது - அதிவிரைவில் உபதேசித்தருள்க. அங்ஙனம் செய்வீராயின்
மா - அழகிய
குருகு - வளையல்கள்
ஒலும் அவை-சப்திக்கின்ற கைகளை
கொளும் - பற்ற நினைக்கின்ற
மால் - எனது மயக்கமானது
உகும் - கெட்டொழியும்
ஏ - அசை

கருத்து

பெருமையுடைய முருகக் கடவுளே! பெரியோர் வடிவமாக அன்பர் முன் வருபவரே! பிரணவத்தின்கண் உள்ள அகார - உகார - மகாரங்களின் பொருளை உபதேசிப்பீராக. அதனல் மயக்கம் நீங்கும்.

கூவா வருமா குருகும் வேலும்
பாவால் நுவலும் பவம்ஈ குவையோ
கோவாழ் ஒருவா குவவாம் வாகு
ஓவா ஏவா உமைகோ வதுவே 2

பொருள்

கூவா - கூவிக்கொண்டு
வரும் - வருகின்ற
மா - பெரிய
குருகும் - சேவற்கொடியையும்
வேலும் - வேலாயுதத்தையும்
பாவால் - தமிழ்ப் பாடல்களால்
நுவலும் - துதிக்கத்தக்க
பவம் - பிறப்பினை
ஈகுவையோ - கொடுத்தருள்வீரோ

கோ - மலைகளிடத்து
வாழ் - வசிக்கின்ற
ஒருவா - ஒப்பற்றவரே!
குவவுஆம் - திரட்சியாகிய
வாகு - புயத்தின்கண்
ஓவா - நீங்காத
ஏவா - பாணங்களை உடையவரே
உமை - பார்வதி தேவிக்கு
கோஅதுவே - சிவனது குமாரரே!

கண்போன்ற குழந்தைப்
பெருமானே.

கருத்து

மலைகளில் வசிக்கும் ஒப்புயர்வில்லாதவரே! புயத்தின்கண் அம்பையுடைய சிவகுமாரரே! உமது சேவற்கொடியையும் வேலாயுதத்தையும் தமிழாற்றுதிக்கின்ற பிறவியை ஈவாயோ அல்லது முத்தியைத்தான் கொடுப்பாயோ? அல்லது யாது செய்வாயோ அறியேன்.

கோகோ அருளோ கொடுமைப் படுமோ
மாகோ துறும்எம் மைவவா கொளுமோ
ஆகோ குமுவா அதுகூ டுகுகோ
போகோ வுருவப் புதுமா வுருவே 3

பொருள்

கோகோ-அந்தோ அந்தோ
அருளோ-உயர்ந்த உமது அருளும்
கொடுமைப்படுமோ - பொல்லாங்கு பெறுமா?
மா-மகத்தாகிய (பெரிய)
கோது-குற்றத்தை
உறும்-பொருந்தியுள்ள
எம்மை-அடியேங்களை
வவ்வா-விரும்பி
கொளுமோ-ஏற்றுக்கொள்ளுமா
ஆகு-பெருச்சாளி வாகனத்தில்

ஓடும் - ஏறிச் செல்லும்
உவாஅது - யானையாகிய விநாயகருடன்
கூடு—விரும்பி சிநேகிக்கத் தக்க
குகோ-குகக் கடவுளே

போகு-ஊர்ந்து செல்கின்ற வாகனமான
ஓஉருவ-பிரணவ வடிவாயுள்ள
புதுமா-புதுமையான மயிற் பரியை உடைய
உருவே-திருவுருவத் தெய்வமே

கருத்து

விநாயகக் கடவுள் விரும்பி நட்பு கொள்ளத்தக்க குகக் கடவுளே! பிரணவ வடிவமான மயில் வாகனத்தையுடைய தெய்வமே! உமது அருள் எங்களை ஆட்கொள்ளுமோ அன்றிக் கொடுமை செய்யுமோ அறியேன்.

பாவம் படுமிப் பரும்நோ வறுமா
கோவம் பொயொடோ குறுகோ வுகொடோ
மாவம் புறுமா துமைபால் உணுவா
வாவம் புகுமெம் முளும்ஆம் விபுவே 4

பொருள்

பாவம் படும்-பாவ சம்பந்தமான
இப்பரும் நோவு-இந்தப் பெரிய துன்பம்
அறுமா- நீங்கும்படி
கோவம்-கோபமானது
பொயொடு-அசத்தியத்துடன்
ஓடுறு-நீங்குதற்கேதுவாகிய
கோவு - ஞானக்கண்ணை
கொடு-தந்தருள்வீராக
ஓம்ஆ-பிரணவத்தின் பொருள் ஆனவரே
வம்புஉறு – கச்சினைஉடைய

மாதுஉமை-பார்வதியம்மையின்
பால் – திருமுலைப்பாலை
உண்– உண்டருளிய
உவாவா-இளமைப் பருவமுடையவரே
அம்பு - கண்ணினது நீரை
உகும்-துயர் மிகையால் உதிர்க்கும்
எம்உளும்-எங்கள் உள்ளத்தினும்
ஆம்-நிறைந்து விளங்குகின்ற
விபுவே - வியாபகப் பொருளே

கருத்து

உமாதேவியின் திருமுலைப் பாலை உண்ட இளமை வடிவினரே! கண்ணீர் விடுத்து இரங்கும் எமது உள்ளத்தில் நிறைந்தவரே! பெருந்துன்பம் நீங்கும்படி ஞானக் கண்ணை யருள்வீராக.

உருவோ அருவோ உனுமா றுறுவாய்
உருகோம் உயுமா ஒருவா வருவாய்
ஒருவே றுமையோ குளுவார் உளுள்ஓர்
ஒருவா குருவா உலவா விகுவே

பொருள்

உனுமாறு - தொண்டர்கள் எண்ணியவாறு
உறுவாய் - திருவுருக்கொள்பவரான நீர்
உருவோ - உருவப்பொருளா அல்லது
அருவோ-அருவப்பொருளோ அறியேம்
உருகோம்-அன்பினால் உருகாத யாங்கள்
உயுமாறு-ஈடேறும்படி
ஒருவா-ஒருவகையாக
வருவாய்-வந்தருள்வீராக
ஒரு - ஆட்டு வாகனத்தில்
ஏறும்-ஏறிப் பவனி வருகின்ற
ஐ-கடவுளே
யோகு-தியான பாவனையால்
உள்ளுவார்-இடைவிடாது நினைப்பவர்களது
உள்உள்-உள்ளத்தினுள்ளாக
ஓர்-அறியப்படும்
ஒருவா-ஒப்பற்றவரே
குருவா-குருவடிவமாயிருந்தும்
உலவா-அதனால் மகிழ்வடையா
விகுவே-கெம்பீரத்தை உடையவரே

கருத்து

ஆட்டு வாகனத்தில் ஏறும் கடவுளே! தியானிப்பவர் மனத்துள் அறியும் ஒப்பற்றவரே! பரம குருநாதராயிருந்தும் அதனுல் இறுமாப் புருத கெம்பீரம் உடையவரே! உருவமாயினும் அருவமாயினும் அன்பர் விரும்பியவாறு வரும் பண்புடையீர்! ஆதலால் எங்கள் முன் ஒரே விதமாக வருதல் வேண்டும்.

ஓவா வேலோடு ஒருதூ வல்உரேம்
மாவா மதுமீ வருகோ முருகோ
வீவா குவனே வீனே விதுவோ
ஊவா வருளோய் உறுமே றுதுவே 6

பொருள்

ஓவா - நீங்காத
வேலோடு - வேலாயுதத்துடன்
ஒரு - ஒப்பற்ற
தூவல் - தோகையை
உறு - பெற்று விளங்குகின்றதும்
ஓம் - பிரணவம் போன்றுள்ளதும் ஆன
மாவாம் அதுமீ-வாகனமான மயில் மீது
வரு - பவனி வருகின்ற
கோ - குருவாகிய
முருகோ - முருகக் கடவுளே

வீவு - இறந்துபடுவதை
ஆகுவனே - பொருந்துவேனே என்று
இது - யான் படுகின்ற துன்பம்
வீண் - பயனற்றதான
நோவோ - வருத்தமாகுமா ?

ஊவா - கெடாத
அருளோய் - கருணையுடையவரே
உறும் ஏறு உதுவோ-துட்டர்கட்கு அச்சம் தரும் இடியேறு போன்ற வீரமுடையவரே

கருத்து

மா என்பதில் குதிரையாகிய மயில் எனினும் ஆம். மயிலைக் குதிரை என்று அருணகிரிநாதர் கூறுவதாலறியலாம். "கலாபத்து ஏர்மா பட்சி துரங்க" என்பதாம்.

குவ்வூ டுறுவா குபலோ புவிமே(வு)
அவ்வூ மனுமாம் அதுலோ வவமே
வெளவூ றுகொளோம் வழுவா விழுமம்
மிவ்வூ ழொடுமே விழுமா தொகுவே 7

பொருள்

குவ்வூடு - கு எனும் எழுத்தின்கண்
உறு - பொருந்தியிருக்கின்ற
வாகு - புயங்களின்
பலோ - வலிமையுடையவரே
புவி - பூலோகத்தில்
மேவு - தோன்றியிருந்த
அவ் ஊமனும் ஆம் - அந்த ஊமைப் பிள்ளையான
அதுலோ - சமானமற்றவரே
அவமே - பயனின்மையையே

வவ்வு - விரும்புகின்ற
ஊறு - குற்றத்தை
கொளோம் - ஏற்காத எங்களது
வழுவா - தவறில்லாதபடி
விழுமம் - இனி வருகின்ற மேன்மையையும்
இவ்வூழொடு - இப்பிறப்பிலேயே
மேவிடுமா - கூறும்படி (இனிப் பிறப்பில்லாதபடி)
தொகு - சேர்த்தருள்வீராக.

ஏ - அசை.

கருத்து.

கு என்னும் மந்திர எழுத்தின் உட்பொருளான பெருமையினரே! மதுரையில் உருத்திர சன்மர் என்ற ஊமைப் பிள்ளையாக அவதரித்த குமாரக் கடவுளே! பெரும் பயனை விழைந்த சிறப்பை இப்பிறப்பிலேயே அருள்வீராக.

வாளோ எனுமை வாகோ மதுவீ
வேளோ டுபல்நோ மிகுமா சுடுமா
கோளோ வுவையோ குமவே வுவையோ
ஆளோ வருகோ அறுகோ ணொருமே 8

பொருள்.

வாளோ எனும் - வாளாயுதமோ என்னும்படி
மை - மை தீட்டப்பெற்று
வா - பாயுந் தன்மையுள்ள
கோ - மாதரது விழிகள்
மது - தேன் பொருந்திய
வீ - புட்ப பாணங்களையுடைய
வேளோடு - மன்மதனுடன் கூடி
பல் - பல்வகையான
நோ - துன்பங்கள்
மிகுமா -அதிகப்படும்படி
சுடும் - சுடுவதாகிய
கோள் - தீய மையல் நோயை
ஓவுவையோ - நீங்கச் செய்வீரோ
கும - வருந்தும்படி
ஏவுவையோ-பொருந்தவிடுவீரோ
ஆள் - உமது தொண்டர்கள்
ஓவரு - நீங்குதற்கரிய
கோ - மலைகளுக்கும்
அறுகோண்-அறுகோணத்துக்கும்
ஒரு - ஒப்பற்றதாக
மே - மேவிய சார்பினரே

கருத்து.

மலைகளுக்கும் அறுகோணத்துக்கும் சார்பான கடவுளே, மாதர்களாலும் மதனாலும் உண்டாகிற பெருந்துன்பங்களை நீக்குவீரோ, இன்னும் அனுபவிக்கும்படி விடுவீரோ அறியேன்.

கோவே டுவமா குருகோ வுவணே
மாவே யுணுமா மறுகோ ருருவா
கூவே குகுகூ குகுகூ நுவலூம்
வீவே றுவமை வெலுமே ணுதுவே 9

பொருள்

கோ - மலையின்கணுள்ள
வேடுவ - வேட்டுவக் குலத்தில் உதித்த
மா - இலக்குமி போன்ற வள்ளி நாயகி
குருகு - பறவைகளை
ஓவு - ஓட்டுகின்ற
அவண் - அந்தத் தினைப் புனத்தின்கண்
ஓ - ஓவென்று இரங்கியளித்த
மாவே - தினை மாவையே
உணுமா - உணவாகக் கொண்ட
மறுகு-மனச் சுழற்சியோடு கூடிய
ஓர் - ஒப்பற்ற
உருவா - திருவுருவுடையவரே!

கூவே குகுகூ குகுகூ - அவ்வாறு கூவி
நுவலும் - சத்தமிடுகின்ற
வீ - சேவலான பறவையானது
வேறு - தனக்கு வேறாயுள்ள பறவையை
உவமை - ஒப்பானதாக ஓதி
வெல்லும் - செயிக்க வல்ல
ஏண் - வலிமையை
உது - உடையதாயிருக்கின்றதா இல்லை, எனவே தனக்குத் தானே சமம் என்றவாறாயிற்று
ஏ - அசை

கருத்து

வள்ளி நாயகி தந்த தினை மாவை உண்பதற்காக மனமயக்கமுடைய ஒரு வடிவு கொண்டவரே. சேவற்கொடியானது தனக்குத்தானே சமமானது ஆதலால் அதன் மேன்மையை உலகறியும்படிச் செய்ய வேண்டும்.

ஒப்பா வொருவேல் உறுதோ ளுறுமீ
முப்பா விடுமா முருகோ முருகு
துப்பா மறுவு தொடுபூ மிகுவா
அப்பா பவனோ வறுகோ வெதுவே 10

பொருள்

ஒப்பா - சமான மில்லாத
ஒருவேல் - ஒரு வேலாயுதத்தை
உறு - தாங்கிய
உரு - அழகிய
தோள்மீ - தோள்களின் மீது
முப்பா - முத்தமிழ்ப் பாடல்களை
இடும் - தரித்துக் கொள்ளும்
மா - பெருமை பொருந்திய
முருகோ - முருகக் கடவுளே
முருகு - தேனை
துப்பு - உமிழ்கின்ற

ஆ - வியப்பை
மருவு - பொருந்தியதாய்
தொடு - தொடுக்கப்பட்ட
பூ - பூமாலைகளை
மிகு - அதிகமாகச் சூடிய
உவா - இளமைப் பருவத்தையுடைய
அப்பா - என் தந்தையே
பவ - பிறப்பாகிய
நோ - துன்பத்தை
அறு - நாசம் செய்யத்தக்க
கோ - மலையாவது
எது - யாது. சொல்லியருள வேண்டும். ஏ-அசை

கருத்து

வேலாயுதத்தை யணிந்த புயத்தின்கண் முத்தமிழ்ப் பாமாலைகளை யணிகின்ற முருகக் கடவுளே. தேன்மிக்க பூமாலைகளை மிகப் புனைந்த எந்தையே. பிறவியைப் போக்கத் தக்க மலை யாது? சொல்வீராக.

எல்லா மலைகளுக்கும் உரிய கடவுளாதல்பற்றி அதன் சிறப்பை அறிந்திருப்பாராதலின் வினவியதாம்.

முற்றிற்று.

நூற் பயன்

கூறு மருமைக் குவிபா ஒருபது
பேறும் வீடும் பெருகுவ வாமே

பொருள்

கூறும் - சொல்லப்பட்ட
அருமை - அருமையானதாகி
குவி – குவிக்கப்பட்டு திரண்டுள்ள
பா - இந்தப் பாடல்கள்
ஒருபது - பத்து என்ற
எண்ணிலுள்ள இவை

பேறும் - சித்திகள் எட்டுடன்
வீடும் - முத்தியான வீடும்
பெருகுவவாம் - படிப்பவர்கட்குப்
பெருகத் தருவனவாகும்
ஏ–அசை

கருத்து

குவிபா ஒருபதினுல் முருகக் கடவுளைத் துதிப்பவர்கட்குப் போகமும் முத்தியும் உண்டாகும்.

கருணாநிதி அச்சகம், திருவாரூர்.